பெயர்:

வகுப்பு: பத்தாம் வகுப்பு

அலகு: இயக்கவியல்

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1.கீழ்கண்டவற்றுள் நிலைமம் எதனைச் சார்ந்தது.

அ) பொருளின் எடை ஆ) கோளின் ஈர்ப்பு மையம் இ) பொருளின் நிறை ஈ) அ மற்றும் ஆ

2.கணத்தாக்கு விசை கீழ்கண்டவற்றுள் எதற்கு சமமானது?

அ) உந்த மாற்று வீதம் ஆ) விசை மற்றும் காலவீதம் இ) உந்த மாற்றம் ஈ) நிறைவீத மாற்றம்

3.கீழ்கண்டவற்றுள் நியூட்டனின் மூன்றாம் விதி எங்கு பயன்படுகிறது?

அ) ஓய்வுநிலையிலுள்ள பொருளில் ஆ) இயக்கப்பொருளில்

இ) சமநிறையில்ள்ள பொருளில் மட்டும் ஈ) அ மற்றும் ஆ

4 உந்த மதிப்பை X அச்சிலும் காலத்தினை Y அச்சிலும் கொண்டு ஒரு வரைப்படம் வரைப்படுகிறது.இவ்வரைப்படத்தில் சாய்வின் மதிப்பு

அ) கணதாக்கு விசை ஆ) முடுக்கம் இ) விசை ஈ) விசை மாற்றவீதம்

5.விசையின் சுழற்சியின் விளைவு கீழ்காணும் எந்த விளையாட்டில் பயன்படுகிறது?

அ) நீச்சல் போட்டி ஆ) டென்னிஸ் இ) சைக்கிள் பந்தயம் ஈ) ஹாக்கி

6.நிறை மதிப்பு மாறாமல் புவியானது தனது ஆரத்தில்50% சுருங்கினால் புவியில் பொருட்களின் எடையானது?

அ) 50% குறையும் ஆ) 50% அதிகரிக்கும் இ) 25% குறையும் ஈ) 300% அதிகரிக்கும்

7.ராக்கெட் ஏவுதலில்----------- விதிகள் பயன்படுத்தப்படுகிறது.

அ) நியூட்டனின் மூன்றாம் விதி ஆ) நியூட்டனின் பொதுஈர்ப்பியல் விதி

இ) நேர்கோட்டு உந்த மாறா விதி ஈ) அ மற்றும் இ

8.நிலவில் ஈர்ப்பு முடுக்கத்தின் சராசரி மதிப்பு------மீ/வி2 ஆகும்.

அ) 1.625 ஆ) 1625 இ) 16.25 ஈ) 0.162

9.கனரகவாகனத்தின் நிறையானது இரு சக்கர வாகன நிறையினைவிட நான்கு மடங்கு அதிகம் எனில் இவைகளுக்குடையே உள்ள உந்த வீதம்

அ) 1:2 ஆ) 2:1 இ) 2:3 ஈ) 3:2

10. இரட்டையின் திருப்புத்திறன் (M)=---------

அ) Mxa ஆ) mxv இ) FxS ஈ) FxM